


கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.09.2024) காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழகத்தின் 75ஆம் ஆண்டு பவள விழா பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.விரமணி, கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் சார்பில் ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சித் தலைவர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், உள்பட மாவட்ட கழகச் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழகம் நூற்றாண்டைக் கடப்பதற்குள் மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்க உறுதியேற்போம்!



# தி.மு.க. விதைக்க நினைக்கும் சிந்தனைகளுக்கு அடித்தளம்தான் தோழமை இயக்கங்கள் ஒன்றாக இருக்கும் இந்த மேடை!

## காஞ்சியில் நடைபெற்ற கழக பவள விழாப் பொதுக்கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**காஞ்சிபுரம், செப். 30 -**

**கஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், “தி.மு.க. விதைக்க நினைக்கும் சிந்தனைகளுக்கான அடித்தளம்தான் தோழமை இயக்கங்கள் ஒன்றாக இருக்கும் இந்த மேடை” எனவும், கழகம் நூற்றாண்டைக் கடப்பதற்குள், மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்க உறுதியேற்போம் என்றும் குறிப்பிட்டார்.**

காஞ்சிபுரத்தில், நேற்று முன்தினம் (28.9.2024) மாலை நடைபெற்ற கழகத்தின் பவள விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு: –

“எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தலைவர்கள் ஒன்றாதல் கண்டே!”... “எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!”...

“எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தலைவர்கள் ஒன்றாதல் கண்டே!”... “எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர் காஞ்சியில் ஒன்றாதல் கண்டே!”...

வீழ்ச்சியுற்ற தமிழ்நாட்டை எழுச்சி பெற வைக்கத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தை உருவாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சி மண்ணில், அவர் உருவாக்கிய பேரியக்கத்தின் பவள விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பெருமை! அதை உருவாக்கிய அண்ணா அவர்களுக்கும் பெருமை!

**வான்மழை வாழ்த்தில் உருவான கழகம் - இன்று வையகம் வாழ்த்த வளர்ந்திருக்கிறது!**

1949 செப்டம்பர் 17ஆம் நாள் இந்த இயக்கத்தை சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய தம்பிமார்களும் தொடங்கியபோது, வானம் தன்னுடைய வாழ்த்துகளை மழையாகப் பொழிந்தது. வான்மழை வாழ்த்தில் உருவான கழகம்தான், இப்போது வையகம் வாழ்த்தும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது!

கழகத்தின் வெற்றி மூலமாகத் தமிழ்நாட்டை வளர்த்தார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற தலைவர் கலைஞர் அவர்கள், அரைநூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதன்மூலமாக தமிழ்நாட்டையும் வளப்படுத்தினார்! தலைவர் கலைஞர் விட்டுச் சென்ற பாதையில் இருந்து, இம்மியளவும் விலகாமல் திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம்.

தி.மு.க. என்ற மூன்றெழுத்தில்தான், நம்முடைய மூச்சும் பேச்சும் உயிரும் உணர்வும் அடங்கி இருக்கிறது. இப்படிப் பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க, கழகத்தின் பவளவிழா சிறப்புக் கூட்டத்துக்கு வருகை தந்து வாழ்த்துகளை தெரிவித்திருக்கும்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

---

### தி.மு.க. இளைஞர் அணி - கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி

## மண்டல அளவிலான போட்டிக்கு மாணவர்களுக்கு பயிற்சி முகாம்!

### திருவண்ணாமலையில் நாஞ்சில் சம்பத் - சி.வி.எம்.பி.எழிலரசன் பங்கேற்பு!

*திருவண்ணாமலை, செப். 30 -*

தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியினை முன்னிட்டு, மண்டல அளவிலான போட் டிக்கு, மாணவர்களுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது. திருவண்ணாமலையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் நாஞ்சில் சம்பத், சி.வி.எம்.பி.எழிலரசன், உமா, சௌமியன், மகிழ்நன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன் திமுக இளைஞர் அணி நடத்திய என் உயிரினும் மேலான..! என்ற பேச்சுப்போட்டியில் 17ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முதற்கட்டமாக மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் 913பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அடுத்தக் கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில், மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, திராவிட இயக்க பேச்சாளர்களை கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. அதனையொட்டி...

29.09.2024 ஞாயிறு அன்று காலை 9.00மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலையில் உள்ள எ.வ.வேலு பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியினை முன்னிட்டு, மண்டல அளவிலான போட்டிக்கு, மாணவர்களுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது.

பயிற்சி முகாமிற்கு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவருமான க.பிரபு தலைமை வகித்து, பயிற்சி முகாமினை தொடங்கி வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான சி.என்.அண்ணாதுரை அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத், மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் உமா, சௌமியன், மகிழ்நன் ஆகியோர் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் வாழ்த்துரை வழங்கி உரையாற்றினார்.

பயிற்சி முகாமில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்டம், திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டங்கள், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில், மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

---

### சென்னை தெற்கு மாவட்டம்

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலப்பாக்கம் கு.சண்முகம் மறைவெய்திய காரணத்தால்;

சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் சென்னை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

## ஈரோடு வடக்கு மாவட்டம் - பேரூர்க் கழகத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15ஆவது பொதுத்தேர்தலில் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள நம்பியூர் ஒன்றியம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) தேர்ந்தெடுக்கப்பட்ட கே.சந்திரன், மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.கே.பழனியப்பன் - அந்தியூர் ஒன்றியம், அத்தாணி பேரூர் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம்.சுப்பிரமணியன் - தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம், காசிபாளையம் பேரூர் அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மகாதேவன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்), மாவட்டப் பிரதிநிதி - அத்தாணி பேரூர் பொருளாளர் - காசிபாளையம் பேரூர் அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, 2024 அக்டோபர் 3 (வியாழக்கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

பேரூர்க் கழக நிர்வாகப் பொறுப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்டப் பிரதிநிதிகளுக்கும் போட்டியிடுவோருக்கு வேட்பு மனுவில் முன்மொழிவோரும் - வழிமொழிவோரும், தொடர்புடைய பேரூர்க் கழகத்தில் அடங்கியுள்ள வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகியாகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு படிவங்களை மாவட்டக் கழகச் செயலாளரிடம் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.